சுருக்கம்

நகர்ப்புற சீர்திருத்தம் - நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களை வலிமைப் படுத்துதல் - புதிய கணக்கு வைப்பு முறையை 95 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 1.4.2000 முதல் நடைமுறைப்படுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(நநி.2)துறை

அரசாணை(நிலை)எண். 3

நாள்: 12.1.2000

படிக்கப்பட்டது:

1. அரசாணை(நிலை) எண்.8, நாள். 6.1.99.
2. தமிழ்நாடு இரண்டாவது நகர்ப்புற வளர்ச்சித் திட்ட நிர்வாக இயக்குநரின், கடித .எண். தி.நி.அ/எப்.எல்/ 221/99 நாள். 10.12.99.

---

ஆணை:

அரசாணை(நிலை) எண்.8, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள். 6.1.99-ல் புதிய கணக்கு வைப்பு முறை முதற்கட்டமாக 1.4.99 முதல் திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் மாநகராட்சிகளிலும் மற்றும் 10 நகராட்சிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் மேற்கண்ட நகராட்சி மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் புதிய கணக்கு வைப்பு நடைமுறையை பழகிக் கொள்ளும் வரையிலும் புதிய முறையுடன் பழைய கணக்கு வைப்பு முறையினையும் தொடர்ந்து பின்பற்றலாம் என ஆணையிடப்பட்டது.

2. தமிழ்நாடு இரண்டாவது நகர்ப்புற வளர்ச்சித் திட்ட இயக்குநர், புதிய கணக்கு வைப்பு முறையை ஏனைய 92 நகராட்சிகளிலும் மற்றும் 3 மாநகராட்சிகளிலும் 1.4.2000 முதல் அறிமுகப்படுத்துவதற்காக ஆவணங்களை முறைப்படுத்தி தேவையான ஆயத்தப் பணிகளை செய்யுமாறு நகராட்சி மற்றும் மாநகராட்சிகளை கேட்டுக் கொண்டுள்ளதாகவும் எனவே 1.4.2000 முதல் மீதமுள்ள 92 நகராட்சிகளிலும் மற்றும் 3

மாநகராட்சிகளிலும் புதிய கணக்கு வைப்பு முறையினை அமுல்படுத்த ஆணை பிறப்பிக்குமாறு தமிழ்நாடு இரண்டாவது நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் திட்ட இயக்குநர் அரசைக் கோரியுள்ளார். மேலும் புதிய கணக்கு முறையை பழகி கொள்ளும் வரையில் புதிய முறையுடன் பழைய கணக்கு வைப்பு முறையினையும் முதல் 6 மாதத்திற்கு தொடர்ந்து பின்பற்றலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

3. அரசு திட்ட இயக்குநரின் கோரிக்கையை ஏற்று புதிய கணக்கு வைப்பு முறையை மீதமுள்ள 92 நகராட்சிகள் மற்றும் 3 மாநகராட்சிகளுக்கும் 1.4.2000 முதல் நடைமுறைப்படுத்தவும் புதிய கணக்கு வைப்பு முறையை பழகிக் கொள்ளும் வரையிலும் பழைய கணக்கு முறையினையும் தொடர்ந்து முதல் 6 மாதங்களுக்கு பின்பற்றவும் ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. மாலதி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
திட்ட இயக்குநர்,
திட்ட நிர்வாக அலகு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் - II, சென்னை-5.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.
ஆணையர், கோயம்புத்தூர்/ மதுரை/ திருநெல்வேலி மாநகராட்சிகள்
(மேயர் வழியாக)
ஆணையாளர், அனைத்து நகராட்சிகள் (நகர்மன்றத் தலைவர் வழியாக)
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை-108.
நகல்:
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (வ.செ) துறை, சென்னை-9.
/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர் 8/2/2000